## செயலாற்று அறிக்கை - 2014

## தேசிய திட்டமிடல் திணைக்களம்

**உள்ளடக்கம்** **பக்கம்**


1. திணைக்களத்தின் தூரநோக்கு, நோக்கம், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 36
2. திணைக்களத்தின் துறைகள் மற்றும் பிரிவுகள் 36
3. 2014 ஆம் ஆண்டின் துறை வாரியான செயலாற்றுகை 37

3.1 விவசாயம் நீர்ப்பாசணம் மற்றும் காணி 37

3.2 பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் சுற்றாடல் 41

3.3 கைத்தொழில்கள், வர்த்தகம் பெருந்தோட்டம்,தகவல் தொடர்பு மற்றும் ஆராய்ச்சி 47

3.4 சுகாதாரம், விளையாட்டு,கலாச்சாரம், தேசிய நல்லிணக்கம் மற்றும் மதங்கள் 50

3.5 கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அபிவிருத்தி 52

3.6 பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் சிறைச்சாலைகள் 54

3.7 பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு 55

3.8 பொது முகாமைத்துவம் 56

4. தகவல் அபிவிருத்தி மையம் 57
5. திணைக்களத்தின் நிர்வாகம் 58
6. 2014 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதிச் செயலாற்றுகை 64

## 1. திணைக்களத்தின் பணிக்கூற்று, தூரநோக்கு, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

**பணிக்கூற்று**

நாட்டிண் அபிவிருத்தியில் ஆலோசகராவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்

**தூர நோக்கு**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அனுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வல்லமையை பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- நீண்டகால, நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது துறைவாரியான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிப்பதில் உதவி செய்தல்
- பேரண்ட பொருளாதார சட்டகம் மற்றம் உபாயங்களை அபிவிருத்தி செய்தல்
- பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள், உபாயங்கள், மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல்
- வரிசை நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்
- மூலதன வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் தொழிநுட்ப உள்ளீடுகளைப் பெற்றக் கொடுத்தல
- கருத்திட்ட முன்மொழிவு இருப்பை தயாரித்தல் மற்றும் மேம்படுத்தல்
- கொள்கை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் திணைக்களத்திற்கு சாட்டப்படும் விசேட செயன்முறைகளை அமுல்படுத்தல்

## 2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 9 துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 26 உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு அது பொருளாதார அபிவிருத்தியின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் வரிசை அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களை தயாரித்தல், மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தயாரித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது

துறைகள்

- I. விவசாயம் நீர்ப்பாசணம் மற்றும் காணி
- II. பொது வசதிகள்
- III. வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து, தகவல் தொடர்பு, தபால் மற்றும் தொலைத் தொடர்பு
- IV. கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டம்
- V. கலை, மதங்கள், தேசிய நல்லிணக்கம், விளையாட்டு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி
- VI. கல்வி மற்றும் சுகாதாரம்
- VII. சுற்றாடல், தொழிநுட்பம், ஆராய்ச்சி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை
- VIII. பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, தொழில் மற்றும் சிறைச்சாலைகள்
- IX. பொது முகாமைத்துவம்

இதற்கு மேலதிகமாக தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம், கணக்காய்வு என்பவற்றிற்காக மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

- I. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்
- II. நிர்வாகப் பிரிவு
- III. நிதிப் பிரிவு

## 3. துறை வாரியான செயலாற்றுகை

### 3.1 விவசாயம், நீர்ப்பாசணம் மற்றும் காணி

**விவசாயத்துறை**

நாட்டின் சனத்தொகையின் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதாரத்தை அளிக்கும் விவசாயமானது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறையின் துரித வளர்ச்சியின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பானது குறைவடைந்தாலும் அது பொருளாதாரத்தின் அடித்தளமாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

விவசாயப் பயிர்களின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை தொடர்ந்தும் அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பல ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டன. உர மானியத்திட்டத்தின் கீழ் நெற் பயிர் செய்கைக்கு 90 சதவீதம் மற்றும் ஏனைய களப் பயிர்களுக்கு 65 சதவீதமான உர மானியம் அளித்ததோடு 2014ஆம் ஆண்டில் ரூபா 35 பில்லியன்கள் செலவிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சேதனப் பசளையின் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் 2014ஆம் ஆண்டில் ரூபா 300 மில்லியன்களை ஒதுக்கியது.

**விஷேட நிகழ்ச்சிகள்**

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் மற்றும் தரவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- "விவசாய உற்பத்திப் பொருள்களின் ஒப்பீட்டு நன்மைகள்" தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத்துறையினை மேம்படுத்துவதனூடாக ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திக்கான கருத்திட்ட கருதுகோள் தயாரிக்கப்பட்டது.

- 33 கருத்திட்ட முன்மொழிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- விவசாய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 23 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமில் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் கொள்கை மீளாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றியமை.

**கால்நடைத்துறை**

கால்நடைத்துறையானது பிரதானமாக பாற் பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய உப பிரிவுகளைக் கொண்டதாகும். 2014ஆம் ஆண்டில் இத்துறை மீதான மொத்த முதலீடு ரூபா 5,689 மில்லியன்களாகும். இதில் ரூபா 5,024 மில்லியன்கள் பிரதானமாக உள்நாட்டு விலங்கு இனங்களை மேம்படுத்தல், கால்நடைகளின் உற்பத்தியை அதிகரித்தல், நோய்த் தடுப்பு, விரிவாக்கல் சேவைகளை விரிவாக்குதல், கால்நடைத்துறையில் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் கிராமிய மக்களின் அபிவிருத்தி மீதான மூலதனச் செலவுகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால்நடைத்துறையின் நடவடிக்கைகளானது கால்நடை அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சானது ஏனைய பொறுப்பான நிறுவனங்களான விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் மில்கோ தனியார் கம்பனி ஆகியவற்றின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

**விசேஷட நிகழ்ச்சிகள்**

- ஏழு கருத்திட்ட முன்மொழிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 5 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற "பால் பண்ணைகளுக்கான மாடுகளை இறக்குமதி செய்தல்" கருத்திட்ட மீளாய்வு கூட்டத்தில் பங்குபற்றியமை.

- இலங்கை/ நியூசிலாந்து பால் பண்ணைத்துறை உயர்தர பயிற்சி முனைவுகள் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு கருத்திட்ட முன்மொழிவைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடலில் பங்குபற்றியது

**நீர்ப்பாசனம் மற்றும் காணித்துறை**

நீர்ப்பாசனத்துறை மீது 2014ஆம் ஆண்டில் ரூபா 46.29 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 42.37 பில்லியன்கள் மூலதனச் செலவினமாகும். புதிய நீர்வள முகாமைத்துவத்திட்டத்தின் கீழ் ஜின் - நில்வளா திசை திருப்புதல் கருத்திட்டம், யான் ஓயா நீர்த்தேக்கம் மற்றும் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத்திட்டம் போன்ற பாரிய அளவிலான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விவசாயம் மற்றும் ஏனைய நீர் பாவனையாளர்களின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் பல நீர்ப்பாசன புனரமைப்புத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

2014இல் காணித்துறை மீதான மொத்தச் செலவினம் ரூபா 6,025 மில்லியன்களாகும். இதில் ரூபா 2,514 மில்லியன்கள் மூலதனச் செலவினமாகும். 'பிம் சவிய' எனும் காணி உறுதி அளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 445 மில்லியன்களும், அரச தேவைகளுக்காக காணி சுவீகரித்தல் நடவடிக்கைகளுக்கு ரூபா 1,646 மில்லியன்களும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு ரூபா 255 மில்லியன்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ரூபா 168 மில்லியன்களும் 2014 வரவு செலவுத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளன.

**மேற்கொள்ளப்பட்ட விஷேட ஆய்வுகள்**

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு நீர்ப்பாசனம் உப தலைப்பில் 'புதியதொரு அபிவிருத்தி காலப்பகுதி' என்ற தலைப்பிலான கட்டுரை எழுதப்பட்டது. இது 2014ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது.

**விஷேட நிகழ்வுகள்**

- 2005 – 2014ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான நீர்ப்பாசனத்துறை சொத்துக்களின் பதிவு தயாரிக்கப்பட்டது.

- 2014 – 2016ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான சிறிய நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு திட்டமானது கைவிடப்பட்ட வயல்காணிகளை பயிரிடும் வகையில் தயாரிக்கப்பட்டது.

- வட மகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாகாண விவசாய அமைச்சுடன் இணைந்து தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஒருங்கிணைந்த விவசாயத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நீர்ப்பாசனத்துறையினால் பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முறையே 8 மற்றும் 18 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- காலநிலை தாக்கங்களை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் ஆற்றுப்படுக்கை திட்டத்தைத் தயாரிப்பதற்கான செயலாற்றுகை விதிமுறைகளைத் தயாரிப்பதற்கான தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத்துறை திட்டமிடல் கருத்திட்டம் மற்றும் மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கு மேலதிக நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- மொறகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம், இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் காலநிலை தாக்கங்களுக்கு ஈடுகொடுத்தல் மேம்படுத்தல் கருத்திட்டம் என்பவற்றின் வழிப்படுத்தல் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- மேலே கூறப்பட்ட அமுலில் உள்ள கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், கொள்கை மீளாய்வு கூட்டங்களில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு வழியுறுத்தப்பட்டது.

**மீன் பிடி**

2014ஆம் ஆண்டில் மீன் பிடித்துறை மீதான மொத்த பொது முதலீடானது ரூபா 9,338 மில்லியன்களாகும். இதில் ரூபா 3,619 மில்லியன்கள் மூலதனச் செலவினங்களாகும். மீன் பிடித்துறையின் அபிவிருத்திக்கான சாதகத் தன்மை மற்றும் வாய்ப்புக்களை அடையாளம் கண்டு அவை மீது அரசாங்கத்தின் பொது முதலீடானது நாடு பூராகவும் காணப்படும் மீன் பிடித் துறைமுக வலையமைப்பை நவீன வசதிகளையும் கொண்ட பூரணமான மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், கரையோர மற்றும் ஆழ்கடல் மீன் பிடியாளர்களுக்கு மீன் பிடி படகுகள் மற்றும் மீன் பிடி படகுகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நீர் வாழினம், மற்றும் நனனீர் மீன் பிடிக்கு ஊக்கமளித்து மீனவ சமூகத்தின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையில் மேற்கொள்ளப்பட்டது.

**விஷேட நடவடிக்கைகள்**

- கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 19 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- கடல் தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- மீன் பிடித்துறையின் தூர நோக்கின் அடிப்படையில் மீன் பிடித்துறையின் முன்னேற்றம் தொடர்பான ''மீன் பிடித்துறை முன்னோக்கிய பாதை'' என்ற கருத்துக் குறிப்பு தயாரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- ''சிறப்பான உணவு ஊட்டல் மற்றும் சுகாதார முகாமைத்துவம் மூலம் இலங்கையில் கடலை அடிப்படையாகக் கொண்ட நீர்வாழ் உயிரினங்களை மேம்படுத்தல்'' என்ற கருத்தரங்கில் பங்குபற்றியமை.

- நீர்கொழும்பு கடல் நீரேரி அபிவிருத்தி கருத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2014ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 3.2 பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் சுற்றாடல்

**நீர் வழங்கல்**

சுத்தமான குடி நீர் மற்றும் துப்பரவு ஏற்பாடுகளுக்கான தேவையானது நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படைத் தேவையாகும். இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு அத்தியவசியமானதோடு, பாதுகாப்பான குடி நீரைப் பெறுவதும் மற்றும் சுத்தமான துப்பரவு ஏற்பாடுகளை ஏற்பாடு செய்வதும் அரசாங்கத்தின் கொள்கை இலக்குகளில் அதி உயர் நிலையில் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் பிரதான இலக்காவது 2020ஆம் ஆண்டின் போது அனைவருக்கும் சமத்துவ அடிப்படையில் நிலைபேறான முறையில் பாதுகாப்பான குடி நீரைப் பெற்றுக் கொடுப்பதாகும். இதனை அமைத்துக்கொள்ளும் வகையில் அரசாங்கமானது 100 சத வீதமான பாதுகாப்பான குடி நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு மும்முனை உபாய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முதலாவது உபாயமாக பிரதான நகரங்கள், நகரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் சிறிய நகரங்கள் இவற்றில் அதிக சனத் தொகையைக் கொண்டவைகளுக்கு 100 சத வீத குழாய் நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் இரண்டாவது உபாயமாக கிராமிய மக்களுக்கு சமூக குடி நீர் வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குழாய் நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும், குடியிருப்பாளர்கள் தமது சொந்த கிணறுகள் மற்றும் ஏனைய நீர் மூலங்களில் இருந்து பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தொடர்ச்சியாக அவற்றின் நீரின் தரத்தை பரிசீலிக்கும் வகையில் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும்.

**விஷேட நடவடிக்கைகள்**

- நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 17 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- நீர் வழங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 20 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு வழங்கப்பட்டது.

- 2014 – 2016 ஆண்டுகளை பொது முதலீட்டுக்கான இத்துறையின் உபாயங்கள் தயாரிக்கப்பட்டன.

- வழிப்படுத்தல் குழுக் கூட்டம், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் உட்பட 20 கூட்டங்களில் பங்குபற்றியமை.

**மின்சாரம் மற்றும் எரிபொருள் துறை**

குறைந்த செலவில் மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்யும் நோக்கில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதோடு இதற்காக வேண்டி சக்தி மூலங்களை பல்வகைப்படுத்தி நீர் மின்சாரம், உயிரியல் மற்றும் சூரிய சக்தி போன்ற தூய்மையான சுதேசிய மூலங்களில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கின்றது. மின்சாரத்திற்கான கேள்வி முகாமையின் கீழ் கிரயத்தை பிரதிபலிக்கும் விலைக் கொள்கை, மற்றும் எரிபொருள் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன 100 சத வீத மின்சாரத்திற்கான அடைவுகளை உறுதிப்படுத்துவதற்கான பிரதான கொள்கைக் காரணிகளாகும்.

***நாட்டின் அபிவிருத்தியில் மின்சக்தி எரிபொருள் துறையின் பங்களிப்பு***

***2014ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்***

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் 24 கருத்திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டதோடு இவை மின்சாரத்துறையின் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய எரிபொருள் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்புபட்டதாகும்.

இதற்கு மேலதிகமாக, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின், மின்சாரம் மற்றும் எரிபொருள் உப பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் நேரடி மற்றும் துணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- சக்தி வளத்துறையுடன் தொடர்புபட்ட தூதுக் குழுக்கள் தொடர்பான விடயங்கள் கையாளப்பட்டன.

- 2015 – 2018ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெற்றோலியத்துறை அபிவிருத்திக்கான முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

**பெருந் தெருக்கள் துறை**

2008/ 2009ஆம் ஆண்டில் 69ஆவது இடத்தில் காணப்பட்ட நாட்டின் வீதிகள் தர உட்கட்டமைப்பு குறிக்காட்டியானது 2013/ 2014ஆம் ஆண்டின் போது 46ஆவது இடத்தை அனுகியது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சியோடு தரைப் போக்குவரத்திற்கான கேள்வியானது அதிகரித்து சென்றுள்ளது. தற்போது 95 சத வீதமான பயணிகள் போக்குவரத்து மற்றும் 98 சத வீதமான சரக்கு போக்குவரத்தானது தரையினூடாகவே இடம் பெறுகின்றது.

நாட்டின் வீதி வலைப்பின்னலானது 12,290 கி.மீ தேசிய, 19,083 கி.மீ மாகாண மற்றும் ஏறக்குறை 112,000 கி.மீ கிராமிய வீதிகளையும் உள்ளடக்கியதாகும். இவை உரிமை மற்றும் முகாமை செய்யும் பொறுப்பின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் சமத்துவமான பிராந்திய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளது. வீதி வலயமைப்பு அபிவிருத்தியின் நிறைவான நோக்கமாவது வீதிகளை அனைத்து வானிலைகளுக்கும் ஏற்புடையதாக அபிவிருத்தி செய்து 100 சத வீத கிராமிய தொடர்பை உருவாக்குதல், அனைத்து வீதிப் பாவனையாளர்களுக்கும் வசதியளித்தல் மற்றும் பிரயாணிகள் மற்றும் சரக்குகளை வினைத்திறனாக இடம் நகர்த்துவதற்கு வசதியளிப்பதற்காக துரித நகர்வுக்கு வசதியளிக்கும் வகையில் பிராந்தியங்களுக்கு இடையிலான அதிவேகப் பாதைகளை உருவாக்குவதாகும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை உருவாக்குவதில் உரிய அமைச்சுக்களுக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- உரிய நிரல் அமைச்சுக்களினால் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களை உள்வாங்கி கருத்திட்ட இருப்பானது புதுப்பிக்கப்பட்டது.
- “B” தரத்திலான தேசிய வீதிகள் மற்றும் மாகாண வீதிகளைப் புனர் நிர்மாணம் செய்வதற்கான கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டது.
- 4 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் நேரடி அவதாணிப்பு வழங்கப்பட்டது.
- உரிய வரிசை அமைச்சுக்களினால் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 22 புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பிரயாணிகள் மற்றும் பொருட்கள் இடம் நகர்வு மற்றும் அடைதல் என்பவற்றை நோக்கும் போது போக்குவரத்து என்பது முக்கிய காரணியாகும். இலங்கையில் பாதுகாப்பான, தரமான மற்றும்

வினைத்திறனான போக்குவரத்து சேவையை பெற்றுக் கொடுப்பதில் போக்குவரத்து அமைச்சு, தனியார் போக்குவரத்து சேவைகள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் பெருந் தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் சேவைகள் ஆகிய நான்கு அமைச்சுக்கள் முக்கிய பங்காற்றியன.

**துறைமுகங்கள்**

2013ஆம் ஆண்டில் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் அது துறைமுகத்திற்கு வருகை தந்த கொள்கலன் சரக்கு கப்பல்களின் மொத்த பாரமானது 0.6 சத வீத வளர்ச்சியைக் காட்டியது. இது இத்துறைமுகத்திற்கு பாரிய கப்பல்களின் வருகையை பிரதிபலிக்கின்றது. துறைமுகங்களினால் கையாளப்பட்ட சரக்குகளின் அளவானது 2 சதவீதத்தினால் அதிகரித்து 66.3 மில்லியன் மெற்றிக் தொன்களாக காணப்பட்டதோடு அக்காலப்பகுதியில் கொள்கலன் கையாள்கையானது 2.8 சத வீதத்தினால் அதிகரித்து 4.3 மில்லியன்களாகக் காணப்பட்டது.

**பொதுப் போக்குவரத்து**

இலங்கையின் மொத்த வாகனப்போக்குவர்த்தில் பஸ் மற்றும் புகையிரத போக்குவரத்து சேவைகளின் பங்களிப்பானது 60 சத வீதமாகும். இதில் பஸ் போக்குவரத்தானது 55 சத வீத பங்களிப்புச் செய்வதோடு இதில் 43 சத வீதமானது தனியார் துறை பஸ் போக்குவரத்துச் சேவைகளாகும். இலங்கை போக்குவரத்து சபையானது 12 சத வீத பங்களிப்புச் செய்வதோடு இலங்கை புகையிரத சேவையானது மொத்த பயணிகள் போக்குவரத்தில் 5 சத வீதத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது. அனைத்து பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் இணைந்து வருடாந்தம் 120 மில்லியன் பிரயாணிகளுக்கு சேவை வழங்குகின்றது.

**சிவில் விமானப் போக்குவரத்து**

2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக பிரயாணித்த பயணிகளின் எண்ணிக்கையானது 3.28 சத வீதத்தினால் அதிகரித்து 7.3 மில்லியனை அடைந்தது. 2014ஆம் ஆண்டில் கையாளப்பட்ட பிரயாணிகள் விமானங்களின் எண்ணிக்கையானது 50,800 ஆகும். இது 2013ஆம் ஆண்டின் 48,416 உடன் ஒப்பிடுகையில் 4.9 சத வீத அதிகரிப்பாகும்.

**விஷேட நடவடிக்கைகள்**

- உரிய நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 21 கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை தயாரிப்பதற்கு உரிய அமைச்சுக்களுக்கு தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- போக்குவரத்து துறை தொலைநோக்கு திட்டங்களை உள்ளடக்கிய ஆவணத்தைத் தயாரிப்பதில் உதவி செய்யப்பட்டது.

**சுற்றாடல்**

எதிர்கால சமூகத்திற்கு இயற்கை மரபுகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் நிலம், தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பேணும் வகையில் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிப்பதே சுற்றாடல் துறை கொள்கையின் நோக்காகும். இந்நோக்கத்திற்காக உரிய பங்காளர்களினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களமானது கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொண்டு வழிகாட்டல்களை வழங்கியது. 2014ஆம் ஆண்டில் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்யும்போது காடுகளின் அளவு குறைவடைதல், வாயு மற்றும் நீர் மாசடைதல், காலநிலை மாற்றங்களின் தாக்கத்தை குறைத்தல், திண்மக்கழிவு முகாமை வசதிகளை அபிவிருத்தி செய்தல், மண் அரிப்பு மற்றும் கடல் அரிப்பு என்பவற்றிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

தற்போது நாட்டின் வன வளமானது 1.95 மில்லியன் ஹெக்டயர்களாகும். இது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 29.7 சத வீதமாகும். நாட்டின் வன வளமானது மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கை காரணிகளின் காரணமாக துரிதமாக குறைவடைந்துள்ளது. நாட்டில் அழிந்து போயுள்ள வன வளமானது புனரமைப்பு மற்றும் மீள் காடு வளர்ப்பு மூலம் சீர் செய்யப்படுவதனூடாக தற்போது காணப்படும் வன வளத்தை மேலும் அழிவுக்குட்படாமல் பாதுகாப்பதனூடாகவும் சீராக்க முடியும்.

அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாக யானைகள் தமது வசிப்பிடங்களை இழப்பதனால் அவை தொடர்ச்சியான யானை மனித மோதலுக்கு இட்டுச் சென்றுள்ளது. தற்போது இலங்கையின் வன விலங்குத்துறையில் காணப்படும் பிரதான பிரச்சினை யானை மனித மோதலாகும். 2014ஆம் ஆண்டில் யானை மனித மோதலை தவிர்க்கும் முகமாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வன விலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை சூழலை பாதுகாத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யானைகள் கடக்கும் இடங்களை தொடர்புபடுத்தி மின்சார வேலிகள் அமைக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**விஷேட நடவடிக்கைகள்**

- 2014ஆம் ஆண்டின் போது, சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பித்தல் சக்தி அமைச்சு, தாவரவியல் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு அமைச்சு, மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு என்பவற்றிலே 25 கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. அனைத்து கருத்திட்டங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு 15 கருத்திட்டங்கள் வெளிநாட்டு நன்கொடைகளுக்காக வெளிநாட்டு வளத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுற்றாடல், தாவரவியல் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு அமைச்சு, மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு என்பவற்றினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 28 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- கருத்திட்ட முன்னேற்ற மீளாய்வு தொடர்பான பல கூட்டங்களில் பங்குபற்றியமை.

- மேற்கூறப்பட்ட அமைச்சுக்களில் வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கான கலந்தாலோசனை கூட்டங்களில் பங்குபற்றியது.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்காக சுற்றாடல், சுற்றுலாத்துறை, வன விலங்குகள், காடு மற்றும் கரையோர பாதுகாப்புதுறை தொடர்பான தகவல்கள் மற்றும் உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**இடர் முகாமைத்துவம்**

இடர்களானது திடீரென ஏற்படும் விபத்துக்கள் அல்லது இயற்கை அனர்த்தங்களாகும். அது பெருமளவில் மரங்களையும் சொத்துக்களையும் அழிக்கும். இலங்கையில் இடம்பெறும் பிரதான இயற்கை அணர்த்தங்களாவன வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண் சரிவுகள், மின்னல் மற்றும் சிறிய அளவிலான சூறாவளிகள், துரித அபிவிருத்தி நடவடிக்கைகள், காலநிலை மாற்றம் சுற்றாடல் அழிவு, மனித நடவடிக்கைகள் போன்றவற்றின் காரணமாக கடந்த இரண்டு தசாப்தங்களில் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும் இடைவெளியானது அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காணலாம். இயங்கை அனர்த்தங்களினால் ஏற்படும் வருடாந்த பொருளாதார இழப்பானது ஐ.அ.டொ. 50-60 மில்லியன்களாகும். இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறையாக 2014 – 2018 இலங்கையின் முழுமையான இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது.

**சுற்றுலா**

தற்போது இலங்கையில் சுற்றுலாத்துறையானது இலங்கையின் ஆறாவது பிரதான வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராகும். 2014ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணியானது ஐ.அ.டொ. 2.2 பில்லியன்களைத் தாண்டியுள்ளது.

**விஷேடநிகழ்வுகள்**

- 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பித்தல் சக்திவள அமைச்சு, தேசிய பூங்காக்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றினால் 25 கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவை அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு 15 கருத்திட்ட முன்மொழிவுகள் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு நிதியீட்டலுக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

- 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பித்தல் சக்திவள அமைச்சு, தேசிய பூங்காக்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 28 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- உரிய அமைச்சுக்களில் இடம்பெற்ற பல கலந்துரையாடல்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டங்களில் பங்குபற்றியமை.

- மேற்கூறிய அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றியமை.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கான சுற்றாடல், சுற்றுலாத்துறை, வன விலங்குகள், வனவளம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு தொடர்பான துறைகளுக்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி**

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட அமைச்சுக்களான நிர்மாணத்துறை, பொருளியில் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு, கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, மீள் குடியேற்றம் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பவற்றுடன் மிகவும் சிநேகபூர்வமான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

**விஷேட நடவடிக்கைகள்**

- 18 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் 05 கருத்திட்டங்கள் அமுல்படுத்தலுக்காக முன்மொழியப்பட்டன.
- 33 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு வழங்கப்பட்டது.
- வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் எதிர்கால உபாயங்களைக் கொண்ட கருதுகோள் தயாரிக்கப்பட்டது.
- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் வரும் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் நிர்மாணத்துறை, பொருளியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சுக்கு கீழ் வரும் அனைத்து நிறுவனங்களுடன் 2015ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை முடிவுசெய்வதற்காக கலந்துரையாடப்பட்டது.
- கொழும்பு நகரத்திற்கான 2020/2035 நகர பொதுப் போக்குவரத்து சேவை சட்டகத்தை தயாரிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து தேசிய திட்டமிடல் திணைக்களம் உரிய ஏற்பாடுகளைச் செய்து பங்குபற்றியது.
- தேசிய திட்டமிடல் திணைக்களமானது உலக வங்கியுடன் இணைந்து “இலங்கை அமைவிட மாற்றுகை உபாயம்” தயாரிப்பதற்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தது.

## 3.3 கைத்தொழில்கள், பெருந்தோட்டம், தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி

**கைத்தொழில்துை**

இலங்கையின் பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையானது மிகவும் முக்கியமானதொரு பங்காற்றுகின்றது. கைத்தொழில் துறையின் பெறுமதி சேர்ப்பு மற்றும் ஏனைய துறைகளுடன் கூடிய உறுதியான தாக்கம் என்பவற்றை கருதும் போது எந்தவொரு அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரத்திற்கும் உறுதியான கைத்தொழில் துறையின் பிரசன்னம் இன்றியமையாததாகும். ஆகவே கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கையாவது, அதி உயர் பெறுமதி சேர்ப்பை அதி உயர் தொழிநுட்ப முனைப்பார்ந்த, பிராந்தியங்களுக்கிடையில் சிறப்பாக பங்கீடு செய்யப்பட்ட, உலகலாவிய ரீதியில் போட்டித்தன்மை கொண்ட மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட கைத்தொழில்துறை ஒன்றை உருவாக்குவதும் மற்றும் அபிவிருத்தி செய்வதுமாகும். அரசாங்கத்தின் கொள்கை நோக்கங்களை

நோக்கி கைத்தொழில் துறையை வழிநடாத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களமானது இக்காலப்பகுதியில் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்துள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டதை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| அமைச்சு | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக அமைச்சு | 4 |
| முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 4 |
| பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 1 |
| உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 1 |
| உள்நாட்டு வர்த்தகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சு | 1 |

- இக்காலப்பகுதியில் 07 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பான ஒரு கொள்கை உபாயங்களை தயாரிப்பதற்காக பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்துடனும் இணைந்து செயற்பட்டது.
- தேசிய கூட்டுறவு கொள்கையை தயாரிப்பதில் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுடன் இணைந்து செயற்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**பெருந்தோட்டக் கைத்தொழில்துறை**

பெருந்தோட்டத் துறையானது தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய ஏற்றுமதிப் பயிர்களை உள்ளடக்கியதாகும். இது இலங்கை பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகின்றது. இத்துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 சத வீத பங்களிப்பை செய்வதோடு 1.5 மில்லியன் வேலை வாய்ப்புக்களையும் அளித்துள்ளது. ஏற்றுமதி வருமானமானது ரூபா 409.09 பில்லியன்களாகும். இதில் தேயிலை ஏற்றுமதியின் பங்களிப்பு மட்டும் 52 சத வீதமாகும்.

பெருந்தோட்டத் துறையினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகளும் மற்றும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது.

தேசிய திட்டமிடல் திணைக்களமானது இத்துறையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், முன் வரவு செலவுத்திட்ட கூட்டங்கள் என்பவற்றில் கலந்து கொண்டு உரிய தரவுகளையும் உள்ளீடுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

திறைசேரியின் செயலாளரை தலைவராகவும் மேலும் ஏழு அமைச்சுக்களின் செயலாளர்களை அங்கத்தவர்களாகவும் கொண்ட அமைச்சரவை உப குழுவிற்காக கந்தளாய், ஹிங்குரான, பலவத்த மற்றும் செவனகல சீனி ஆலைகளை உள்ளடக்கிய இலங்கை சீனிக் கம்பனிக்கு காணிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

நிதி அமைச்சின் 2013ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் சேர்ப்பதற்காக “தொடர் பெறுமதி சேர்ப்பு பெருந்தோட்டத் துறையை நோக்கி” என்ற ஒரு பின்னணி பத்திரம் தயாரிக்கப்பட்டது.

### தகவல் தொழினுட்பம் மற்றும் தொடர்பாடல்துறை

தகவல் தொழினுட்பம் மற்றும் தொடர்பாடல்துறையானது தகவல் தொழினுட்பம், தபால் மற்றும் தொலைத்தொடர்புதுத்றைகளை உள்ளடக்கியதாகும். தகவல் தொழிநுட்பத்துறையானது பின்வரும் வருமான உழைப்புத்துறைகளான தகவல் தொழினுட்ப இயலாக்க சேவைகள், தகவல் மற்றம் தொடர்பாடல் தொழினுட்பம் / வெளியார் வியாபார செயலாக்கம் (ICT/BPO) மற்றும் வெளியார் அறிவு செயலாக்கம் (ICT/KPO) உள்ளடக்கியதாகும்.

தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் துறையானது பிரதானமாக அறிவுடன் தொடர்புபட்ட சேவைத் துறையாகும். ஆகவே அரசாங்கமானது தகவல் தொலைத்தொடர்பு வசதிகளின் மேம்பாடு, தகவல்கள் மற்றும் தொடர்பாடலுக்கான அடைவு, இலத்திரனியல் அரச செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வசதிகளை உருவாக்கி தொடர்புபட்ட சேவைகள் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொடுப்பதோடு தனியார்த்துறைக்கு மிகவும் சிறப்பாக செயலாற்ற அவசியமான அனைத்து சாதகமான சூழலையும் உருவாக்கியுள்ளது.

#### செயற்பாடுகள்

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 17 புதிய கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தகவல் மற்றும் தொடர்பாடல் துறைக்கான கருத்திட்ட காப்பானது தயாரிக்கப்பட்டது.
- 2015/2017 ஆண்டு காலப்பகுதிக்கான இத்துறையுடன் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய உபதுறைகளின் அபிவிருத்தி வெளியீடு / நன்மைகளின் குறிக்காட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.
- தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு மற்றும் தகவல்துறை அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் கொள்கைப் பத்திரங்களுக்கான அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- ஏழு அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை தயாரிப்பதற்காக உரிய அமைச்சுக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

**தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திகளை உலகத் தரத்திற்கு உயர்த்துவதே அரசாங்கத்தின் முதன்மை இலக்காகக் காணப்படுகின்றது. அதி உயர் தரத்திலான தொழிநுட்பத்துடன் கூடிய கைத்தொழில் மயமாக்கலானது ஒரு நாட்டை துரித பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்கின்றது. அரசாங்கமானது நாட்டில் அதி உயர் தொழினுட்ப பாவனையுடன் கூடிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் மூலம் உள்ளூர் கைத்தொழில் முயற்சிகளின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்த முடியும். அதிஉயர் தொழினுட்பத்துறைகளான நனோ தொழினுநுட்பம், மற்றும் உயிரியல் தொழிநுட்பம் என்பவற்றில் ஆராய்ச்சி அபிவிருத்தியானது உணவு பதனிடல், நார் தொழினுட்ப கலாசாரம் மற்றும் உரம் போன்ற கைத்தொழில்களுக்கு பல பெறுமதிகளைச் சேர்த்துள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 2014ஆம் ஆண்டில் தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் கிடைக்கப் பெற்ற 5 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்பத்துறைக்கான கருத்திட்ட இருப்புக்காப்பு தயாரிக்கப்பட்டது.
- அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கருத்திட்டங்களை மீளாய்வு தொடர்பான பல கலந்துரையாடல்களில் பங்குபற்றியன.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**3.4 சுகாதாரம், விளையாட்டு, கலாசாரம், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் மதங்கள்**

**சுகாதாரம்**

இலங்கையானது தரமான சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் புகழத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. இப்பிராந்தியத்தில் ஏனைய நாடுகளின் சுகாதார குறிக்காட்டிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர் நிலையில் சிறப்பானதாகக் காணப்படுகின்றது. சுகாதாரத் துறையில் அரசாங்கத்தின் நோக்கமானது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். ஆகவே அரசாங்கமானது 2014ஆம் ஆண்டில் விஷேடமாக நோய் தவிர்ப்பு நடவடிக்கைகளின் தேவைகளில் கவனம் செலுத்தியதோடு குறிப்பாக தொற்றல்லா நோய்கள், மனநோய் மற்றும் சிறுவர் நலன்களில் பிரதானமாக கவனம் செலுத்தியது. 2014ஆம் ஆண்டில்

சுகாதாரத் துறை மீதான மொத்த முதலீடுகள் ரூபா 154 பில்லியன்களாகும். இது மத்திய, மாகாண மற்றும் சுதேச வைத்தியம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதனால் தலைக்குரிய சுகாதாரச் செலவானது ரூபா 5,683இல் இருந்து ரூபா 7,448ஆக அதிகரித்துள்ளது. சுகாதாரத்துறை மீதான மூலதனச் செலவினம் பிரதானமாக வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல், உள்ளூர் மருந்து உற்பத்தியை அதிகரித்தல் மருந்து உபகரணங்கள் மற்றும் மருத்துவமல்லா உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மருத்துவத்துறையுடன் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்டது.

- 2014ஆம் ஆண்டில் 16 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.
- சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 24 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- 2015 – 2017 சுகாதாரத்துறை அபிவிருத்தி திட்டத்தை மறுசீரமைப்புச் செய்வதை நோக்காகக் கொண்டு சுகாதார அமைச்சு மற்றும் அபிவிருத்தி பங்காளர்களுடன் பல கட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றியது.
- சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பல கருத்திட்ட வழிநடாத்தல் கூட்டங்கள், மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றியது.
- சுகாதாரத்துறை மீதான கருத்திட்ட இருப்புக் கோப்பு தயாரிக்கப்பட்டது.

**சமயங்கள்,கலாசாரம், தேசிய மரபுரிமைகள் மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத்துறையின் செயலாற்றுகை**

இப்பிரிவானது, பௌத்த சாசனம் மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சு, கலை மற்றும் கலாசார அமைச்சு, தேசிய மரபுரிமைகள் அமைச்சு மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய நான்கு அமைச்சுக்களைக் கொண்டதாகும். இந்நான்கு அமைச்சுக்களும் பின்வரும் விடயங்களைக் கையாள்கின்றன. பௌத்த சமயம், இந்து சமயம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் சமயங்கள், தொல்பொருள், தேசிய நூதனசாலைகள், தேசிய சுவடிகள் கூடம், கலைகள், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு.

**விஷேட விடயங்கள்**

- அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- 2014ஆம் ஆண்டில் 15 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- கலை கலாசார அமைச்சின் ஐந்து வருட திட்டத்தை தயாரிப்பதற்கான தொழினுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

## 3.5 கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அபிவிருத்தி

**கல்வி**

அரசாங்கத்தின் தொலைநோக்கான அறிவியல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான பிரதான மைற்கல்லை கல்வித்துறையானது 2014ஆம் ஆண்டில் அடைந்துள்ளது. அதே வேளை உலகலாவிய ரீதியில் மாறிவரும் அறிவினால் உந்தப்பட்ட பொருளாதார சூழலில் உருவாகும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய தகைமைகளுடன் கூடிய எதிர்கால சந்ததியினை உருவாக்க அடித்தளமிடப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் பிரதான திருப்பம் யாதெனில் தொழிற்சந்தையின் கேள்வியினை பூர்த்தி செய்யும் நோக்கில் பாடவிதானமானது பல்வகைப்படுத்தப்பட்டு உயர்தரத்திற்கு தொழினுட்ப பிரிவு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவானது முதன்முதலில் 2013ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது இப்பிரிவில் 32,500 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதற்கு மேலதிகமாக இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் அபிவிருத்தி, ஆரம்ப பாடசாலைகள் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கிடையில் தொடர்பை உருவாக்குவதனூடாக ஆரம்ப கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் அடைவை உறுதி செய்வதை நோக்காகக் கொண்டதாகும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கல்வித்துறையின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக உரிய பங்காளர்களுடனான கலந்துரையாடல்களில் மிகவும் சுறுசுறுப்பாகப் பங்குபற்றி உரிய உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- தொழினுட்ப துறையில் உயர் தரத்தை தொடரும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு மற்றும் உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பொதுக் கல்வி முறைமையினுள் முழுமையான தகவல் தொடர்பு தொழிநுட்ப உபாயத்தை அறிமுகம் செய்தல் மற்றும் இலத்திரனியல் கற்கை செயற்பாட்டை அறிமுகம் செய்யும் நோக்குடனும் மாகாண மட்டத்திலும் வலயக் கல்விக் காரியாலய மட்டத்திலும் தகவல் தொடர்பு தொழினுட்ப மையங்களை உருவாக்கி இலங்கையின் பொதுக் கல்வி முறைமையில் மேலும் தகவல் தொழினுநுட்பத்தை ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப் பட்டறை மற்றும் கூட்டங்களில் பங்குபற்றியது.

- பல்கலைக்கழக நகர மையங்களை உருவாக்குதல் போன்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களை தயாரிப்பதற்கு உயர் கல்வி அமைச்சுக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு உரிய நிறுவனங்களுடன் கலந்துறையாடி கருத்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கான விஷேட கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- மாகாண மட்டங்களில் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களின் குறைபாடுகள் தொடர்பான தகவல்கள் மாகாண கல்வி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டு ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- 2014ஆம் ஆண்டு டிசம்பர் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு என்பவற்றினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை சீர் செய்வதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி கருத்திட்டம் மற்றும் அறிவு சமூகம் கருத்திட்டம் போன்ற பிரதான வெளிநாட்டு நிதியீட்டல் கருத்திட்டங்கள் தொடர்பான தூதுக்குழுவுடனான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதோடு அதில் கலந்து கொண்டுள்ளது.

- அமைச்சுக்கள் மற்றும் உரிய நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டங்களையும் உள்வாங்கி கருத்திட்ட இருப்புக் கோப்பு புதுப்பிக்கப்பட்டது.

- கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் கொள்கை பத்திரிகைகளுக்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- கல்வி மற்றும் உயர்கல்வித்துறையுடன் தொடர்புபட்ட 79 புதிய கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

**தொழிற்கல்வி**

நாட்டின் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரமானது அதி உயர் திறனைக் கொண்ட தொழிற்படையினை வேண்டி நிற்கின்றது. அரசாங்கமானது 2020 ஆண்டின்போது வருடாந்தம் 250,000 தொழிற்திறன் கொண்ட இளைஞர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. இதில் 175,000 பேர் தேசிய தொழில் தகைமை உடையவர்கள்.

- ஏழு கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அமுல்படுத்தலுக்காக சிபாரிசு செய்யப்பட்டது. மதிப்பீட்டறிக்கைகள் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத்திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

- இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- 2014 – 2020 தொழிற்கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் பிரத்தியேகமான ஒவ்வொரு தொழிற்கல்வி நிறுவனத்தினதும் நடவடிக்கை திட்டங்களை மீளமைத்தல் தொடர்பாகவும் பல்வேறு தொழிற்கல்வி நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி நிதியளிப்பு பங்காளர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

- பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்குகின்ற பொது தொழில் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் 2014 – 2020 திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டத்திற்குள் உள்வாங்கி அவற்றிற்கு 2015ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுத்து தற்போதுள்ள தொழிற்கல்வி முறையில் ஒரு சிறந்த மறுசீரமைப்பைக் கொண்டுவரும் நோக்கில் நாட்டின் அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் உரிய தொழிற்கல்வி நிறுவனங்களுடன் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

- 2014 – 2020 தொழிற் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு, தொழிற் கல்வித்துறையில் செய்யப்பட வேண்டிய மறுசீரமைப்புகள், 2014 – 2020 தொழிற்கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலை கண்காணித்தல் மற்றும் அரச மற்றும் தனியார்துறை தொழிற்கல்வி நிலையங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் 2014 – 2020 தொழிற்கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது தேசிய வழிநடாத்தல் கூட்டம் நடாத்தப்பட்டது. இதில் அரச தனியார் கைத்தொழிற்துறை பங்காளிகள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

- மனித வளத்துறை சிரேஷ்ட அமைச்சரின் காரியாலயத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில் கொள்கைகள் பிரதான திட்டத்தை அமுல்படுத்துதல் கருத்திட்டத்தை மேற்பார்வை செய்யும் முறைமை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூபா 15 மில்லியன்களை உதவியாகப் பெற்றுக் கொள்வதற்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

## 3.6 பேரண்டப் பொருளாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் சிறைச்சாலை

### தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார திட்டமிடல்

பேரண்ட பொருளாதார திட்டமிடல் மற்றும் தொழிற் பிரிவானது பேரண்ட பொருளாதாரக் கொள்கைகளைத் தயாரித்தல், தற்போதுள்ள பேரண்ட பொருளாதார நிலைமையை மீளாய்வு செய்து பிரச்சினைகளை அடையாளம் காணல் மற்றும் பொருத்தமான தீர்வுகளை சிபாரிசு செய்வதுமே இப்பிரிவின் பொறுப்புக்களாகும். இப்பிரிவானது பிரதானமாக பேரண்ட பொருளாதார மாறிகளான மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலை வாய்ப்பு, பணவீக்கம் மற்றும் சென்மதி நிலுவை என்பவற்றுடன் ஈடுபாடு கொண்டுள்ளது. மேலும் இப்பிரிவானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கையின் திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்தும் நோக்கில் உள்ளீடு – வெளியீட்டு அட்டவணை மற்றும் நிழல் விலைகளை தயாரிப்பதற்கான கலந்துரையாடல்களை ஒருங்கிணைக்கின்றது.

### பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்

- மூன்று அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2013ஆம் ஆண்டு ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 2015 – 2016 நடுத்தர கால வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 2015 – 2017 காலத்துக்கான பிரதான பேரண்ட பொருளாதார இலக்குகள் மற்றும் துறைவாரியான இலக்குகள் தயாரிக்கப்பட்டன.

- கொள்கை திட்டமிடல் உருவாக்கத்திற்கு உதவியாக உள்ளீடு – வெளியீடு அட்டவணையைத் தயாரிப்பதில் பங்குபற்றியதோடு இதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழினுட்ப உதவி தொடர்பான கூட்டங்களையும் ஏற்பாடு செய்தது.
- உள்ளீடு – வெளியீட்டு அட்டவணை தயாரிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டது.

## 3.7 பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு

### சமூக பாதுகாப்பு

சமூக பாதுகாப்பு தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களமானது சமூக சேவைகள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு மற்றும் மீள் குடியமர்த்தல் அமைச்சு போன்ற தொடர்புடைய அமைச்சுக்களுடன் இணைந்து செயற்பட்டது. தற்போது இலங்கையின் சனத்தொகை மற்றும் சமூக கட்டமைப்பானது குறிப்பிடும்படியான கட்டமைப்பு மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. இதன் விளைவாக சமூகத்தில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் அங்கவீனர்கள் போன்றோர் அதிகளவில் பலவீனமடைந்துள்ளனர். எவ்வாறாயினும் உரிய அமைச்சுக்களுடன் இணைந்து இவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இவர்களையும் சமூகத்தில் பிரதான நீரோட்டத்தில் இணைக்கும் நோக்குடன் பிரத்தியேக குழுக்களை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டில் அரசாங்கமானது ரூபா 1,399 மில்லியன்களை சமூக பாதுகாப்பு மீது மேற்கொண்டுள்ளது. இதில் முதியோர் மற்றும் அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகள் முக்கிய பங்கை வகிக்கின்றது.

### செயலாற்றுகை

- அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 11 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதோடு 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித்திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பும் சமர்ப்பிக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- சுற்றுலாத்துறையுடன் இணைந்ததாக முறைசாரா குழுவினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது.
- 2015 – 2020 தேசிய முன்பள்ளி குழந்தைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான உபாய வேலைச்சட்டகம் தயாரிக்கப்பட்டது.
- இத்துறையுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு, மற்றும் கருத்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டமை.

### பிராந்திய அபிவிருத்தி

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களில் காணப்பட்ட நகர சார்புத்தன்மை மற்றும் முன்னைய தசாப்தங்களில் அமுல்படுத்தப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் பின்பற்றிய தொடர்பு அற்ற அணுகுமுறைகளை அடையாளம் கண்டு குடும்பம் - கிராமம் - சிறிய நகரங்கள் - நகரங்கள் - பிராந்தியங்களை நாட்டின் பிரதான பொருளாதார செயற்பாட்டுடன் இணைத்து சர்வதேச சந்தைக்கு இணைக்கும் வகையில் அரசாங்கமானது புதியதொரு ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய பிராந்திய அபிவிருத்தி கோட்பாடானது மரபு ரீதியான பிராந்திய அபிவிருத்திக் கோட்பாட்டிற்கு முற்றிலும் மாற்றமாக பிராந்திய அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியில் பிராந்தியத்தில் காணப்படும் மூலவளங்களைப் பயன்படுத்துவதனூடாக நிதியானது அப்பிராந்தியங்களுக்குள் சுழற்சியடைகின்றது என நம்புவதாகும். இதன் மூலம் இப்பிராந்தியங்களின் நிலைமை சிறப்பாக அமையும். இதன் அடிப்படையில், பிராந்திய அபிவிருத்தியில் காணப்படும் பல்வேறுபட்ட பிராந்தியங்களுக்கிடையில் அதிகூடிய ஒருங்கிணைப்பை உறுதி செய்வதனூடாக சாத்தியமான

மூலவளங்களை அடையாளம் காண்பதும் மற்றும் நகர்த்துவதும் அரசாங்கத்தின் பிரதான தலையீட்டு மூலமாகும்.

ஆகவே பிராந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் உபாயங்களை அமுல்படுத்துவதனூடாக அனைத்து பிராந்தியங்களையும் சமாந்தரமான ஒரு தளத்திற்கு கொண்டுவருதல், பிராந்தியங்களுக்கிடையில் வள இணைப்பை மேம்படுத்தல், பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நீக்கி பிராந்தியங்களை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சியுடன் இணைப்பதே அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் உயர் இடம்பிடித்துள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைச் சட்டகமானது பல ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியதாகும். கமநகும, திவி நகும, புர நகும மற்றும் பிரத்தியேகமாக ஒன்பது மாகாணங்களுக்குமான பிராந்திய அபிவிருத்தி திட்டங்கள் என்பன சிலவாகும். இவற்றின் கீழ் விஷேடமாக கிராமிய விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வசதிகளை விரிவாக்கும் வகையில் களஞ்சியசாலை வசதிகளை உருவாக்குவதாகும்.

**செயலாற்றுகை**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு வழங்கியதோடு 09 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

## 3.8 பொது முகாமைத்துவம்

அரசாங்க சேவைகளை பொது மக்களுக்கு மிகவும் செயற்திறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென நாட்டின் அரச சேவையானது தொடர்ச்சியாக மேம்படுத்தப்படல் வேண்டும். தனியார்த்துறையினர் தமது செயற்பாடுகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதில் அரச சேவையின் பங்களிப்பினை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. ஆகவே அரச சேவையில் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களின் இயலளவை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். கடந்த வருடத்தில் அரச துறையின் அபிவிருத்தியில் தேசிய திட்டமிடல் திணைக்களமானது பல வகைகளில் பங்களிப்புச் செய்துள்ளது.

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 26 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்காக தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- 18 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- பொது முகாமைத்துவ நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- 2015 – 2017 நடுத்தரகால வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை உருவாக்குவதற்கு உரிய அமைச்சுக்களுக்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 4. தகவல் தொடர்பாடலுக்கான நிலையம்

**நூலகத்தின் ஒழுங்கிணைப்பு**

i. உள்வரும் நூல்களை பெற்றுக்கொள்ளலும் வகைப்படுத்தலும்.

ii. பருவகால இதழ்களை சீர்செய்தல்.

iii. பாவணையாளர்களுக்கு பாவணைக்கு கிடைப்பதற்கு முன்பு அவற்றை செயன்முறைக்கு உட்படுத்தல்.

iv. நூலகத்தின் புத்தக இருப்பை மீள் ஒழுங்கு செய்தல்.

**பகிர்வு விசாரணை மற்றும் தேடல் சேவைகள்**

i. தகவல் தேவைக்கான விசாரணைகளுக்கு கவனம் செலுத்துதல்.

ii. கணினித் தகவல் அடிப்படையில் விசாரணைகளுக்கு அவசியமான உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

iii. நூல்கள் பகிர்வுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்து பராமரித்தல்.

iv. பருவகால சஞ்சிகை மற்றும் பத்திரிகை கட்டுரைகளை இலக்கமிடல்.

v. பாவணையாளர்களின் தேவைக்கு ஏற்ப செய்திகள் மற்றும் கட்டுரைகளைப் பிரதிசெய்து இலத்திறனியல் ஆவணங்களாக வழங்குதல்.

**ஏனைய நூலகங்களுடன் ஒருங்கிணைப்பு**

i. பருவகால சஞ்சிகைகளின் பட்டியலை புதுப்பித்து பராமரித்தல்.

ii. தேசிய நூலகம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட மற்றும் ஏனைய பங்குபற்றல் வலையமைப்புக்களுக்கு உட்படுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி நுழைவுகள் தயாரிக்கப்பட்டன.

iii. இலத்திறனியல் தகவல் ஊடகங்களின் அடிப்படையில் நூலகங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் பராமரிக்கப்பட்டன.

**நிதித் திட்டமிடல் அமைச்சின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளூர் வலையமைப்பில் இணைத்துக்கொள்ளல்.**

i. நிதித் திட்டமிடல் அமைச்சின் இணையத்தளத்திற்கு புதிய செய்திகள் மற்றும் புதிய வருகைகள் தொடர்பான தகவல்களை வழங்கி பங்களிப்புச் செய்கின்றது.

ii. இலங்கை மக்கள் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் வங்கியியல், நூலக வலையமைப்பு நிதித் திட்டம் (இலத்திரனியல் - வங்கி வலையமைப்பு) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சிலிஸ்செட் வலையமைப்பில் பங்குபற்றியது.

iii. தேசிய நூலக வலையமைப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

## 5. திணைக்களத்தின் நிர்வாகம்

### 2014 இல் திணைக்களத்தின் ஆளணி

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. சீ. விஜேவர்தன | பணிப்பாளர் நாயகம் |
| 2 | திரு. எஸ். எஸ். முதலிகே | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3 | திருமதி. எம். கங்காதரன் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 4 | திருமதி. எஸ். டீ. ரத்னாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 5 | திரு. கே. டீ. எஸ். ஆர். பெரேரா | பணிப்பாளர் |
| 6 | செல்வி. என். விஜேவீர | பணிப்பாளர் (நிதி) |
| 7 | திரு. என். யூ. என். மெண்டிஸ் | பணிப்பாளர் |
| 8 | திரு. யூ. என். மல்லவாராச்சி | பணிப்பாளர் |
| 9 | திருமதி. சீ. சேனாநாயக்க | பணிப்பாளர் |
| 10 | திரு. டீ. ஏ. டீ. டீ. பிரேமரத்ன | பணிப்பாளர் |
| 11 | திரு. டீ. எம். ஜே. பண்டார | பணிப்பாளர் |
| 12 | திரு. எம். எப். முபாரக் | பணிப்பாளர் |
| 13 | திருமதி. பீ. எச். சந்திமா | உதவிப் பணிப்பாளர் |
| 14 | திருமதி. டீ. ஏ. நிஹரேபொல | உதவிப் பணிப்பாளர் |
| 15 | திரு. ஆர். கே. எம். என். என். பலிபான | உதவிப் பணிப்பாளர் |
| 16 | திரு. பீ. எம். எஸ். ஜயதிலக்க | உதவிப் பணிப்பாளர் |
| 17 | திரு. கே. என். பீ. ஜயரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 18 | திரு. டீ. எம். டீ. பீ. தென்னகோன் | உதவிப் பணிப்பாளர் |
| 19 | திருமதி. டப்லியு. எல். பீ. பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 20 | திருமதி. ஆர். கே. எல். ஜாகொட | உதவிப் பணிப்பாளர் |
| 21 | திருமதி. டீ. வை. எல். முனசிங்ஹ | உதவிப் பணிப்பாளர் |
| 22 | திரு. ஆர். டீ. ஏ. மைத்ரீரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 23 | திருமதி. ஜீ. ஆர். சீ. ஹேவாவாசம் | உதவிப் பணிப்பாளர் |
| 24 | திருமதி. எம். ஏ .ஜீ. துஷாரி | உதவிப் பணிப்பாளர் |
| 25 | திருமதி. ஈ. ஏ. சீ. டீ. பீரிஸ் | உதவிப் பணிப்பாளர் |
| 26 | திருமதி. டப்லியு. ஏ. ஜே. சீ. விக்ரம ஆராச்சி | உதவிப் பணிப்பாளர் |
| 27 | திருமதி. டீ. ஏ. மனோரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 28 | திருமதி. டப்லியு. ஏ. வல்பிட்ட | உதவிப் பணிப்பாளர் |
| 29 | செல்வி. டீ. எச். ஆர். டீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| 30 | திரு. கே. ஜீ. ஆர். ஜீ. ஆர். விக்ரமவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 31 | திரு. டீ. பீ. எஸ். எம். தயாசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 32 | திரு. ஜீ. அருனன் | உதவிப் பணிப்பாளர் |
| 33 | திருமதி. எச். டீ. என். கே. ஹெட்டிஆராச்சி | உதவிப் பணிப்பாளர் |
| 34 | திரு. ஆர். பீ. எஸ். ஜே. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 35 | திரு. கே. பீ. எஸ். எஸ். பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 36 | திரு. வீ. சீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 37 | திரு. எல். எச். எம். ஆர். பீ. லன்சகார | உதவிப் பணிப்பாளர் |
| 38 | திரு. ஆர். ஜீ. பீ. டீ சில்வா | உதவிப் பணிப்பாளர் |
| 39 | செல்வி. யூ. ஏ. டப்லியு. எல். சுமனசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 40 | செல்வி. கே. டீ. சீ. தமராசி | உதவிப் பணிப்பாளர் |
| 41 | திருமதி. டப்லியு. எம். ஹன்சனி | உதவிப் பணிப்பாளர் |
| 42 | செல்வி. எம். ஜீ. பீ. கே. டீ. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 43 | செல்வி. பீ .ஏ. நிஷாதி லக்ஷிலா | உதவிப் பணிப்பாளர் |
| 44 | செல்வி. பீ. ஏ. என். அபேசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 45 | திருமதி. ஆர். டீ. ஏ. லக்ஷ்மி | நிர்வாக உத்தியோகத்தர் |
| 46 | திருமதி. எஸ். டீ. சாமனி பிரியங்கா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 47 | திருமதி. எச். எம். எஸ். ஹேரத் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 48 | திருமதி. எஸ். டீ. ஐ. ஆராச்சிகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 49 | திரு. எச். எம். ஆர். ஏ. பண்டார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 50 | திரு. ஈ. என். கே. ஜீ. கே. எம். ஏக்கநாயக்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 51 | திருமதி. கே. ஜீ. பீ. தமயந்தி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 52 | திருமதி. பீ. கே. கே. ஆர். ராஜகருன | முகாமைத்துவ உதவியாளர் I |
| 53 | திருமதி. ஜே. ஏ. டீ. சீ. ஜயகொடி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 54 | திருமதி. டப்லியு. டீ. பீ. பெனான்டோ | முகாமைத்துவ உதவியாளர் II |
| 55 | திருமதி. ஆர் .ஏ. டீ. கே. ராஜபக்ஷ | முகாமைத்துவ உதவியாளர் II |
| 56 | செல்வி. கே. எல். டப்லியு. சீ. எல். டீ சில்வா | முகாமைத்துவ உதவியாளர் II |
| 57 | திரு. பீ. எஸ். ஆர். பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் II |
| 58 | திருமதி. ஏ. டீ. என். மெலனி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 59 | திருமதி. என். ஈ. லியனகே | முகாமைத்துவ உதவியாளர் II |
| 60 | திரு. பீ. டப்லிவ். என். எஸ். பதிராஜா | முகாமைத்துவ உதவியாளர் II |
| 61 | திரு. ஈ. ஏ. சீ. எஸ். ஏதிரிசிங்ஹ | முகாமைத்துவ உதவியாளர் II |
| 62 | திரு. என். ஆர். ஹெட்டி ஆராச்சி | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 63 | திரு. யூ. யூ. ரத்னகுமார | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 64 | திரு. எம். டீ. ஆர். பெனான்டோ | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 65 | திரு. எம். ஏ. எல். நலின் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 66 | திரு. பீ. எஸ். அஜித் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 67 | திரு. பீ. பிரியந்த | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 68 | திரு. டீ. ஏ. என். சந்திரதிலக்க | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 69 | திரு. எம். சீ. பதீப் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 70 | திரு. எம். பீ. ஆர். ரத்னாயக்க | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 71 | திரு. ஏ. எம். ஆர். எஸ். டீ. குமார | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 72 | திரு. ஜீ. எஸ். ரோஹன | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 73 | திரு. பீ. எஸ். கே. பெரேரா | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 74 | திரு. கே. கே. சீ. கரஸ்னகல | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 75 | திரு. டப்லியு. எம். ஜினதாச | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 76 | திரு. என். எஸ். யூ. கே. சில்வா | கனிஷ்ட காரியாலய உதவியாளர் II |
| 77 | திரு. எம். ஏ. எஸ். கே. ஜயவர்தன | சாரதி I |

| | | |
|---|---|---|
| 78 | திரு. கே. பீ. கரவிட்ட | சாரதி I |
| 79 | திரு. ஆனந்த விஜேதுங்க | சாரதி I |
| 80 | திரு. ஏ. எம். எல். தீபால் | சாரதி I |
| 81 | திரு. எஸ். ஜயசூரிய | சாரதி II |
| 82 | திரு. பீ. எஸ். ஆனந்த | சாரதி II |
| 83 | திரு. பீ. டீ. டீ. புஷ்பகுமார | சாரதி II |
| 84 | திரு. டப்லியு. எம். என். கருணாதிலக்க | சாரதி II |
| 85 | திரு. டீ. எம். டீ. ஷிரோன் | சாரதி II |
| 86 | திரு. டீ. பீ. திஸாநாயக்க | சாரதி II |
| 87 | திரு. டீ. ஜீ. பீ. சமந்த | சாரதி II |
| 88 | திரு. ஈ. ஏ. எஸ். எஸ். எதிரிசிங்க | சாரதி II |
| 89 | திரு. ஜே. ஜீ. யூ. விமலசிரி | சாரதி II |

**2014 புதிய நியமனங்கள**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. ஈ. ஏ. சீ. எஸ். எதிரிசிங்க | முகாமைத்துவ உதவியாளர் II |

**2014 திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. பீ.டப்லிவ். என். எஸ். பதிராஜா | முகாமைத்துவ உதவியாளர் II |
| 2 | திருமதி. ஏ .டீ. என். மெலனி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 3 | திருமதி. என். ஈ. லியனகே | முகாமைத்துவ உதவியாளர் II |
| 4 | திரு. ஏ. எம். எல். தீபால் | சாரதி I |
| 5 | திரு. ஈ. ஏ. எஸ். எஸ். எதிரிசிங்க | சாரதி II |
| 6 | திரு. பீ. எஸ். அஜித் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 7 | திரு. எம். ஏ. ஜே. கே. மல்லவாராச்சி | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 8 | திரு. டீ. எம். எல். கே. தென்னகோன் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் III |

**திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. எம். ஏ. எஸ். தாபரேரா | உதவிப் பணிப்பாளர் |
| 2 | செல்வி. எஸ். எம். பீ. எம். விபுலசேன | உதவிப் பணிப்பாளர் |
| 3 | திரு. ஆர். எல். வீரசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 4 | திருமதி. ஏ. ஆர். சீ. பத்மினி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 5 | திரு. எச். ஏ. ஜே. நிமால் | முகாமைத்துவ உதவியாளர் II |
| 6 | திரு. எம். எஸ். ரனசிங்க | முகாமைத்துவ உதவியாளர் II |
| 7 | திரு. டப்லிவ். டீ. துஷார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 8 | செல்வி. டப்லிவ்.என். ஆர். சீ. லலனி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 9 | திரு. டீ. ரத்னசிரி | சாரதி II |
| 10 | திரு. எம். ஜே. கே. மல்லவாராச்சி | கனிஷ்ட காரியாலய உதவியாளர் I |
| 11 | திரு. டீ. எம். எல். கே. தென்னகோன் | கனிஷ்ட காரியாலய உதவியாளர் III |
| 12 | திரு. கே. எச். சமன்சிரி | சாரதி II |

**வெளிநாட்டுப் பயிற்சிகள் - 2014**

(பணிப்பாளர் நாயகம் / மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள் / பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள் / நூலகர் / திட்டமிடல் உதவியாளர்கள் / ஆராய்ச்சி உதவியாளர்கள்)

| பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நாடு | காலம் |
|---|---|---|---|
| திருமதி. சாந்தனி விஜயவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாடு<br>ஆசிய அபிவிருத்தி வங்கி தலைமைக் காரியாலயத்திற்கான குழு விஜயம்<br>சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜெய்க்கா அமைப்பின் தலைமைக் காரியாலயத்திற்கான குழு விஜயம் | சிங்கப்பூர்<br>மனிலா<br>ஜப்பான் | 21 மே<br>29-31 மே<br>8-13 ஜுன் |
| திருமதி. கங்காதரன்<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | ஆசிய நாடுகளுக்கான நகர அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு<br>போக்குவரத்து மாநாடு | சீனா<br>பிலிப்பைன்ஸ் | 17-31 மார்ச்<br>15-19 செப்டெம்பர் |
| திரு. எஸ். எஸ். முதலிகே<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | ஆசிய அபிவிருத்தி வங்கியின் 47ஆவது வருடாந்த மாநாடு<br>தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் இருபதாவது ஆளுனர் குழுக்கூட்டம்<br>தெற்காசிய உப பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தக வசதியளிப்பு மற்றும் போக்குவரத்து மற்றும் சக்திவளத்துறை சேவைக்குழு | கஸகஸ்தான்<br>புதுடில்லி இந்தியா<br>நேபாளம் | 2-5 மே<br>4-5 செப்டெம்பர்<br>4-5 நவம்பர் |
| திருமதி. ஜே. எம். எஸ். டீ. ரத்நாயக்க<br>மேலதிகப் பணிப்பளர் | தெற்காசிய ஒத்துழைப்பு அமைப்பு 2015 பிந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்<br>இந்து சமுத்திர வலய அமைப்பு பெண்கள் பொருளாதார வழுவூட்டல்<br>இலங்கை கட்டார் நாடுகளுக்கிடையிலான முதலாவது பொருளாதார, வர்த்தக மற்றும் தொழினுட்ப கூட்டுக் குழுக் கூட்டம் | நேபாளம<br>மலேசியா<br>தோஹா கட்டார் | 26-28 செப்டெம்பர்<br>17-19 ஒகஸ்ட்<br>14-15 செப்டெம்பர் |
| செல்வி. டப்லிவ். கே. நிஷாந்தி<br>பணிப்பாளர் (நிதி) | அபிவிருத்தி மீளாய்வுக்கான ஷங்ஹாய் சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | சீனா | 13-24 ஒக்டோபர் |
| திரு. நிஷான்<br>பணிப்பாளர் | இலங்கை நிர்வாக சேவையின் தரம் 1 அதிகாரிகளுக்கான இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான நாடுகளுக்கான விஜயம் | மலேசியா | 9-21 நவம்பர் |

| | | | |
|---|---|---|---|
| திரு. எம். எப். ஏ. முபாரக்<br>பணிப்பாளர் | நிலைபேறான நகர அபிவிருத்தி திட்டமிடல் | தோஹா<br>கட்டார் | 3-6 மார்ச் |
| திரு. டீ. ஏ. டீ. டீ. பிரேமரத்ன<br>பணிப்பாளர் | தெற்காசிய நாடுகளின் அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ உதவிகள் தொடர்பான கருத்தரங்கு | சீனா | 12-23 மே |
| திரு. டீ. எம். ஜே. பண்டார<br>பணிப்பாளர் | தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் 2015 பிந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | நேபால் | 26-28 செப்டெம்பர் |
| திருமதி. சீ. சேனநாயக்க<br>பணிப்பாளர் | தொற்றல்லா நோய்கள் தொடர்பான பிராந்திய கலந்துரையாடல்<br>ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தகவல் தொழிநுட்பத்தைக் கொண்டு உலகலாவிய சுகாதார அடைவை மதிப்பீடு செய்வது தொடர்பான மாநாடு | இந்தியா<br>பங்களூர்<br><br>மனிலா | 18-20 ஓகஸ்ட்<br><br>2-3 டிசம்பர் |
| திரு. கே. டீ. எஸ். ஆர். பெரேரா<br>பணிப்பாளர் | தர நிர்ணயம், தரக் கட்டுப்பாடு, குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான இலங்கை குழு விஜயம் | ஈராக் | 5-31 ஜனவரி |
| திரு. யூ.என். மல்லவாராட்சி<br>பணிப்பாளர் | இலங்கைக்கான உட்கட்டமைப்பு, நிர்மாணம் மற்றும் திட்டமிடல் கருத்தரங்கு<br>போக்குவரத்து துறையில் சீதோஷ்ண நிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் அவற்றை குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு | சீனா<br><br>ஜப்பான் | 6-26 மார்ச்<br><br>23-25 செப்டெம்பர் |
| திருமதி. சந்திமா புஞ்சிஹேவா<br>உதவிப் பணிப்பாளர் | ஐ.நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார சமூக அமைப்பின் 7ஆவது கூட்டத் தொடர் (கட்டம் I)<br>ஐ.நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார சமூக அமைப்பின் 7ஆவது கூட்டத் தொடர் (கட்டம் II) | தாய்லாந்து<br>பாங்கொக்<br><br>தாய்லாந்து<br>பாங்கொக் | 23 மே<br><br>4-6 ஓகஸ்ட் |
| திரு. பீ. எம். எஸ். ஜயதிலக<br>உதவிப் பணிப்பாளர் | அதிக ஆபத்துக்களுடன் கூடிய முதலீட்டுத் திட்டமிடலுக்கான பிராந்திய கருத்தரங்கு<br>சூழல் பெறுமதியியல் முறைகள் தொடர்பான பயிற்சி நெறி<br>இரண்டாவது ஆபத்துக்களுடன் கூடிய முதலீட்டுக்கான திட்டமிடல் பிராந்திய கருத்தரங்கு | தாய்லாந்து<br><br>மாலைதீவு<br><br>தாய்லாந்து | 25 ஏப்ரல்<br><br>15-17 ஒக்டோபர்<br>15-18 செப்டெம்பர் |
| திருமதி.எம். ஏ. ஜீ. துஷாரி<br>உதவிப் பணிப்பாளர் | உட்கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் திட்டமிடல் கருத்தரங்கு | சீனா | 2-26 மார்ச் |

| | | | |
|---|---|---|---|
| திருமதி வருனி அப்சரா வலிபிட்ட<br>உதவிப் பணிப்பாளர் | கீழ் மட்டத்திலிருந்தான பொருளாதார அபிவிருத்தி மற்றும் போதுமான பொருளாதார கொள்கை<br>ஜப்பான் உலக வங்கி கூட்டு புலமைப்பரிசில் கீழான பட்டப் பின் படிப்புக்கான புலமைப்பரிசில் (கல்வியாண்டு 2014/2015) | தாய்லாந்து<br>ஜப்பான் | 9-11 ஜூலை<br>2014-2016 |
| திரு. கே. ஜீ. ஆர். ஜீ. ஆர். விக்ரமவர்தன<br>உதவிப் பணிப்பாளர் | இலங்கைக்கான உட்கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் திட்டமிடல்<br>தெற்காசியாவின் சீதோஷ்ண மாற்றத்திற்கான நடவடிக்கைகள் | சீனா<br>மனிலா | 6-26 மார்ச்<br>9-14 செப்டெம்பர் |
| திருமதி. டீ. வை. எல். முனசிங்க<br>உதவிப் பணிப்பாளர் | பெறுமதி சேர்க்கப்பட்ட உலகலாவிய பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி உபாயம் | சிங்கப்பூர் | 6-8 மே |
| திருமதி. டீ. ஏ. சீ. டீ. பீரிஸ்<br>உதவிப் பணிப்பாளர் | அறிவுப் பங்கீட்டு நிகழ்ச்சித்திட்டம் | கொரியா | 20-25 ஜனவரி |
| திருமதி. டீ. ஏ. நிஹரெபொல<br>உதவிப் பணிப்பாளர் | ஆசிய நாடுகளுக்கான உட்கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் திட்டமிடல் கருத்தரங்கு | சீனா | 18 ஜூலை – 07 ஒகஸ்ட் |
| திருமதி. ராஜிதா கிஸாகோதமி லங்காதிலக்க ஜாகொட<br>உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான சக்திவளக் கொள்கை மற்றும் மின்சக்தி திட்டமிடல் கருத்தரங்கு | சீனா | 5-25 ஒகஸ்ட் |
| திரு. ஜீ. அருநன்<br>உதவிப் பணிப்பாளர் | ஆசிய நாடுகளுக்கான பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சீராக்கங்கள் தொடர்பான கருத்தரங்கு | சீனா | 8-28 மே |
| திரு. எல். எச். எம். ஆர். பீ. லங்சக்கார<br>உதவிப் பணிப்பாளர் | ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வியாபார தரவுகளை சேகரித்தல், சுறுக்குதல் மற்றும் ஆராய்தல் தொடர்பான கருத்தரங்கு | சீனா | 25 ஜூன் - 22 ஜூலை |
| திருமதி. கே.டீ. சந்திமா தமராசி<br>உதவிப் பணிப்பாளர் | விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்கள் கொள்கை ஆராய்ச்சி மற்றும் முறைமைகள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு | சீனா | 3-22 நவம்பர் |
| திரு. வீ.சீ. விஜேவர்தன<br>உதவிப் பணிப்பாளர் | மூன்றாவது ஆசிய அபிவிருத்தி வங்கியின் துப்பரவு ஏற்பாடுகள் தொடர்பான கருத்தரங்கு | மனிலா | 27-29 மே |

## 6. நிதித்துறை செயலாற்றுகை

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மொத்த செலவுகள் வருமானங்கள் மற்றும் மூலதனச் செலவுகளின் சுருக்கம் பின்வருமாறு

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | 2013 | | 2014 | | 2012 இன் உண்மைச் செலவு அடிப்படையில்வித்தியாசம்சத வீதத்தில் |
|---|---|---|---|---|---|
| | மொத்த ஒதுக்கம் (ரூபா) | மொத்த செலவு(ரூபா) | மொத்த ஒதுக்கம்(ரூபா) | மொத்த செலவு(ரூபா) | |
| **மீண்டெழும் செலவு** | 63,662 ,000.00 | 61,672,281.00 | 75,251,500.00 | 73,526,902.00 | -19.22 |
| மூலதன **செலவு** | 99,075,000.00 | 95,685,647.00 | 98,112,500.00 | 72,142,779.00 | 24.60 |
| மொத்தம் | **162,737,000.00** | **157,357,928.00** | **173,364,000.00** | **145,669,681.00** | **7.42** |

வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி வழங்கப்பட்டுள்ள உபதிட்டங்களின் தகவல்கள் பின்வருமாறு

| உப திட்டம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | 2013 | | 2014 | | 2012 இன் உண்மைச் செலவு அடிப்படையில் வித்தியாசம்சத வீதத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கம் (ரூபா) | மொத்த செலவு(ரூபா) | மொத்த ஒதுக்கம்(ரூபா) | மொத்த செலவு(ரூபா) | |
| | **மீண்டெழும் செலவு** | **63,662,000.00** | **61,672,281.00** | **75,251,500.00** | **73,526,902.00** | **-19.22** |
| 0 | பொதுநிர்வாகம | 60,889,400.00 | 59,006,251.00 | 73,384,000.00 | 71,660,127.00 | -21.44 |
| 2 | பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய மன்றம் | 2,772,600.00 | 2,666,030.00 | 1,867,500.00 | 1,866,775.00 | 29.97 |
| | மூலதன **செலவு** | **99,075,000.00** | **95,685,647.00** | **98,112,500.00** | **72,142,779.00** | **24.60** |
| 0 | பொதுநிர்வாகம | 7,210,000.00 | 6,854,642.00 | 4,100,000.00 | 3,536,088.00 | 48.41 |
| 2 | பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய மன்றம் | 215,000.00 | 211,950.00 | 200,000.00 | 162,820.00 | 23.17 |
| 7 | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி கருத்திட்ட முகாமை (அரசாங்கம்.׃. ஜய்கா) | 43,200,000.00 | 41,911,950.00 | 31,716,500.00 | 31,636,414.00 | 24.51 |
| 8 | கிழக்குமாகாண கிராமிய வீதி அபிவிருத்தி கருத்திட்ட முகாமை (அரசாங்கம்.׃. ஜய்கா) | 32,890,000.00 | 32,874,202.00 | 28,510,000.00 | 28,256,750.00 | 14.04 |
| 12 | திடீர் இயற்கை அணர்த்த புணரமைப்பு திட்டம | 5,100,000.00 | 5,098,281.00 | 3,756,000.00 | 3,754,019.00 | 26.36 |
| 13 | ஆபிவிருத்தி அடைந்து வரும் பிராந்திங்களின் அடிப்படை சமூக சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம் (இலங்கை (அரசாங்கம்.׃.ஜய்கா) | 810,000.00 | - | 4,200,000.00 | 4,191,688.00 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | திட்டமிடல்,கண்காணிப்புமற்றும் மீளாய்வு (ஜ.நா.சி.நி ) | 6,650,000.00 | 6,500,000.00 | ෟ | ෟ | 100 |
| 15 | சுனத்தொகை மற்றும் அபிவிருத்தி (ஜ.நா.ச.நி) | 3,000,000.00 | 2,234,622.00 | 3,750,000.00 | 605,000.00 | 72.92 |
| 16 | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இயலளவை அபிவிருத்தி செய்தல் | - | - | 21,880,000.00 | 0.00 | |
| | **மொத்தம்** | **162,737,000.00** | **157,357,928.00** | **173,364,000.00** | **145,669,681.00** | **7.42** |